**திக்வெல்ல பிரதேச சபை**

**மாத்தறை மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 பெப்ரவரி 27 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஆகஸ்ட் 08 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள திக்வெல்ல பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் கணனி மயப்படுத்தப்பட்டு தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அந்த கணனிமயப்படுத்தப்பட்ட முறைமை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படாதிருந்தமையினால் மீளாய்வாண்டின் கொடுக்கல் வாங்கல்கள் சரியாக கணக்கு வைக்கப்பட்டதா என உறுதிப்படுத்த முடியாதிருந்ததுடன் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது பயன்படுத்த வேண்டிய பி.ச படிவம் மற்றும் பட்டோலை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதியின் பிரகாரம் பயன்படுத்த வேண்டிய பி.ச.3 தொடக்கம் பி.ச 19 வரையான படிவம் பயன்படுத்தப்பட்டு கணக்கு தயாரிக்கப்பட்டிராமையால் நிதிக் கூற்றுக்களில் காணப்படுகின்ற மீதிகள் சரியானது என உறுதிப்படுத்த முடியவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 488,148 பெறுமதியான நூலகப் புத்தகங்கள், கணனி அச்சிடல் இயந்திரம், ஒரு யூ.பீ.எஸ் மற்றும் முன்பள்ளிப் பாடசாலை உபரகணங்கள் என்பன நிலையான சொத்தின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) முன்னைய ஆண்டின் மதிப்பிடப்பட்ட முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 5,500,000 தொகையாக வருமானக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் உள்ளபடியான பெறுவனவுகள் ரூபா 9,799,402 ஆக இருந்தது. மீளாய்வாண்டின் போது ரூபா 4,299,402 குறைவான ஒதுக்கீடுகளுக்காக நாட்குறிப்புப் பதிவேட்டின் மூலம் கணக்கில் சீராக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ரூபா 7,731,489 பெறுமதியான சொத்துக் கணக்கின் 06 விடயங்கள் மற்றும் ரூபா 8,506,329 பெறுமதியான பொறுப்புக் கணக்கின் 06 விடயங்களுக்குரிய ஆரம்ப மீதி நாட்குறிப்புப் பதிவின் மூலம் உரிய பேரேட்டுக் கணக்குகளுக்கு மாற்றப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் ஆதனவரி, ஏக்கர் வரி மற்றும் களியாட்ட வரிகளுக்கான கட்டுப்பாட்டுக் கணக்குகளின் ஆரம்ப மீதிக்கு ஆண்டின் பற்றுச்சீட்டிடல்கள் சேர்க்கப்பட்டு ஆண்டின் பெறுவனவுகள் மற்றும் ஆண்டின் இறுதி மீதி என்பன சீராக்கப்பட்டு கட்டுப்பாட்டுக் கணக்கு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டில் பிரதேச சபையின் காணி மற்றும் கட்டிடங்களின் பட்டோலையின் பிரகாரம் சபைக்கு நன்கொடையாகக் கிடைத்த 04 ஏக்கர் 01

றூட் அளவான 13 காணிக் கூறுகளின் பெறுமதி மதிப்பிடப்பட்டு காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டில் நிலுவையாக இருந்த ஏனைய வருமானக் கணக்கின் ஆரம்ப மீதி ரூபா 4,477,704 ஆக இருந்த போதிலும் பேரேட்டுக் கணக்கின் பிரகாரம் பெறுமதி ரூபா 8,506,331 ஆனமையால் வேறுபாடு ரூபா 4,028,627 ஆக இருந்தது.

(ஏ) மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் திரண்ட நிதிக் கணக்கில் முன்கொண்டுவரப்பட்ட பெறுமதி ரூபா 95,153,969 தொகை மறை மீதியாக இருந்த போதிலும் பிரதான பேரேட்டின் பிரகாரம் பெறுமதி ரூபா 40,234,077 சாதக மீதி காணப்பட்டது.

(ஐ) மீளாய்வாண்டின் போது ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்திலிருந்து கிடைத்த ரூபா 395,698 பெறுமதியான மருந்து இருப்புக்கள் பெறுவனவாக கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் மீளாய்வாண்டின் இறுதியில் கையிலுள்ள மருந்து இருப்புக்களின் பெறுமதி ரூபா 54,193 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 140,492 ஆகக் காண்பிக்கப்பட்டமையினால் வேறுபாடு ரூபா 86,299 ஆகக் காணப்பட்டது.

(ஒ) 13 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 57,826,546 ஆக இருந்ததுடன் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 42,664,381 ஆனமையால் ரூபா 15,162,165 வேறுபாடு காணப்பட்டது.

(ஓ) 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சியிருந்த கிடைக்கவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை முறையே ரூபா 107,500 மற்றும் ரூபா 85,044,498 ஆக இருந்தது.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 90,297,692 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 80,589,896 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,329,023 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 1,869 | 1,490 | 775 |
| (ii) | வாடகை | 4,627 | 6,522 | 3,454 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 667 | 950 | 746 |
| (iv) | ஏனைய வருமானம் | 6,457 | 6,498 | 30,416 |

#### 2.2.2 நிலுவை வாடகை மற்றும் கட்டணம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாகக் கிடைக்கவேண்டிய ரூபா 1,409,662 தொகையான வாடகை மற்றும் கட்டணங்கள் 1987 இன் 15 ஆம் இலக்க

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158 மற்றும் 159 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்ற தண்டப்பணமாக ரூபா 253,384 தொகையும், முத்திரைக் கட்டணமாக ரூபா 5,743,142 தொகையும் கிடைக்கவேண்டியிருந்தது.

### 2.2.4 கடை வாடகை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திக்வெல்ல பஸ்நிலைய கடை

தரைமாடியில் 05 கடைகள் மாதமொன்றிற்கு ரூபா 500 படியும், மேல்மாடியின் 13 கடைகள் மாதமொன்றிற்கு ரூபா 800 படியும் 2010 மே 01 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் முதலாவது நிபந்தனையின் பிரகாரம் குறிப்பிட்ட வாடகைப் பணம் ஒவ்வொரு மாதமும் 25 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்தப்பட வேண்டிய போதிலும் அந்த 13 கடைகளுக்காக அவ்வாறு நடவடிக்கை எடுக்காமையினால் மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவையாக இருந்த தொகை ரூபா 88,400 ஆகும்.

(ஆ) திக்வெல்ல பொதுச் சந்தைக் கடைகள்

திக்வெல்ல பொதுச் சந்தையின் 20 கடைகளுக்காக கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகளின் காலம் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்திருந்ததுடன் உடன்படிக்கைக்காலம் முடிவடைந்து 04 மாதங்கள் கடக்கும் வரையும் புதிய உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது சபை வாடகையாளர்களால் வியாபாரங்களைச் செயற்வதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் நிபந்தனை 01, 02, 03 என்பன புறக்கணிக்கப்பட்டிருந்ததுடன் உரிய பிரகாரம் வாடகைப் பணம் செலுத்துதல் புறக்கணிக்கப்படும் போது வாடகை உடன்படிக்கை செல்லுபடியற்றதாகின்றமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்தும் வாடகையாளர்கள் வியாபாரங்களில் ஈடுபட்டிருந்ததுடன் 10 கடைகளிலிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 150,750 தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

(இ) பெலிவத்த பொதுச் சந்தைக் கடை வாடகை

பெலிவத்த பொதுச் சந்தையில் 13 கடைகளுக்காக 2010 யூன் 01 ஆந் திகதி தொடக்கம் 2013 யூன் 01 ஆந் திகதி வரை மூன்று வருட காலத்திற்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு வாடகைக்கு வழங்கியிருந்ததுடன் வாடகை உடன்படிக்கையின் 09 ஆவது பிரிவின் பிரகாரம் வாடகைக்குப் பெறப்பட்ட இடங்கள் வியாபார நடவடிக்கைகளுக்காக திறந்து வைக்கப்பட வேண்டியிருந்ததுடன் எந்தக் காரணமின்றியும் மூடிவைக்கப்பட முடியாதிருந்தது. எனினும் 01, 02, 04, 05 மற்றும் 13 ஆம் இலக்க கடைகள் மூடப்பட்டிருந்ததுடன் அந்தக் கடைகளிலிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 143,500 தொகை நிலுவையாக இருந்தது. மேலும் சந்தையின் 03, 06, 07 ஆம் இலக்க கடைகள் வாடகை உடன்படிக்கைக்கு முரணாக வேறுநபர்களினால் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தமை 2013 மே 03 ஆந் திகதிய பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டதுடன் சபையின் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரினால் அது தொடர்பாக அறிவிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வலஸ்கல பொதுச் சந்தைக் கடைகள்

(i) வலஸ்கல பொதுச் சந்தைக் கடையில் 01 ஆம் மற்றும் 02 ஆம் இலக்க கடைகளிலிருந்து 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு முறையே ரூபா 10,500 மற்றும் ரூபா 4,500 தொகைகள் அறவிடவேண்டியிருந்தது.

(ii) 03 ஆம் இலக்க கடையின் வாடகைக் காலம் 2012 செப்தெம்பர் 01 ஆந் திகதியில் முடிவடைந்திருந்ததுடன் உடன்படிக்கைக் காலம் கடந்து 07 மாதங்கள் ஆகியிருந்த போதிலும் உடன்படிக்கையைப் புதுப்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்தக் கடை செயற்திட்ட செயற்பாடுகளுக்காக வேறு நபருக்கு உப வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தமையும் 2013 மே 03 ஆந் திகதிய பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(உ) றத்மலை பொதுச் சந்தைக் கடை

றத்மலை பொதுச் சந்தையின் 02 கடைகளிலிருந்து ரூபா 50,500 தொகையும் றதம்பல கடைத் தொகுதியில் 10 கடைகளிலிருந்து ரூபா 18,800 தொகையுமாக ரூபா 69,300 தொகை அறவிடவேண்டியதாகக் காணப்பட்டது.

## 2.3 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 52 ஆகவும், உள்ளபடியான பதவியணியினர் 65 ஆகவும் இருந்தது. மீளாய்வாண்டில் உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து பதவியணியினர் சம்பளம் மற்றும் உறுப்பினர் படிகளுக்காக ரூபா 17,883,500 தொகை மீளளிப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் ஆண்டின் சம்பளச் செலவினம் ரூபா 18,681,608 ஆனமையால் சபை நிதியத்திற்கு ரூபா 798,108 தொகையான மேலதிக செலவினப் பொறுப்பாக ஏற்பட்டிருந்தது.

(ஆ) 2002 சனவரி 03 மற்றும் 2006 ஏப்ரல் 10 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின் இலக்கம் 14 மற்றும் 28 இன் மூலம் உள்ளூராட்சி நிறுவனங்களில் அமைய, நாட்கூலி மற்றும் ஒப்பந்த ஊழியர்களைச் சேர்த்தல் கைவிடப்பட்டிருந்த போதிலும் அந்த ஏற்பாடுகளுக்கு முரணாக 25 ஊழியர்கள் சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின் போது சம்பளமாக சபை நிதியத்திலிருந்து ரூபா 3,868,839 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இந்த சுற்றுநிருப ஆலோசனைகளை மீறி ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டால் நிறுவனத் தலைவர் அதற்காக தனிப்பட்ட பொறுப்பினை ஏற்கவேண்டியிருந்தமையும் அதில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

## 2.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) இலங்கை மின்சார சபையுடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட வீதி விளக்குகளின் எண்ணிக்கை 186 ஆக இருந்த

போதிலும் 308 விளக்குகள் பொருத்தப்பட்டிருந்தன. வீதி விளக்கு உப பாகங்கள் பொருத்தப்பட்ட இடங்கள் அல்லது உப பாகங்கள் பொருத்தப்பட்டமைக்கு மேற்பார்வை உத்தியோகத்தரினால் சபை எடுத்த தீர்மானங்கள் தொடர்பான பதிவேடு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இரண்டு ஆயுர்வேத மருந்தகங்களில் நிரந்தர பதவியணியினரில் இரண்டு ஆயுர்வேத வைத்தியர்கள், ஒரு மருந்துக் கலவையாளர் மற்றும் இரண்டு தொழிலாளர்கள் உள்ளடங்கியிருந்ததுடன் பதவியணியினருக்கு மீளாய்வாண்டிற்காக ரூபா 1,401,317 தொகை சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தது. உள்ளூராட்சி நிறுவனத்தின் மூலம் நிருவகிக்கப்படுகின்ற சுதந்திரமான ஆயுர்வேத மருந்தகத்திற்கு அரசாங்கத்தின் உதவிகளைப் பெறுவதற்காக ஆயுர்வேத 39 படிவத்தின் மூலம் இரண்டு வைத்தியர்களின் சம்பளம் மற்றும் மருந்துக் கலவையாளர் மற்றும் சிற்றூழியர்களின் சம்பளம் மற்றும் படிகள், கட்டிட வாடகை, மருந்துகளின் பெறுமதி, ஒரு நோயாளருக்காக அறவிட வேண்டிய கட்டணம், பெறவேண்டிய அளவுகள் கணிப்பீடு செய்யப்பட்டு ஆயுர்வேத உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்காக ஆயுர்வேத ஆணையாளருக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.

## 2.5 அனுமதியற்ற நிர்மாணங்கள்

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126(vii) இன் (உ) மற்றும் (எ) மற்றும் 126(ix)(உ) இல் குறிப்பிடப்பட்ட உப விதிகளில் உள்ளடங்கும் விடயங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்காமையினால் சபை அதிகாரப் பிரதேசத்தில் அனுமதியற்ற 26 நிர்மாணங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன.

(ஆ) அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் சபையினால் அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக உப விதிகளும் விதிக்கப்படாதிருந்தமையினால் அந்த விடயங்கள் தொடர்பாக முறையான நடவடிக்கைகளை எடுக்கப்பதற்கு முடியாதிருந்தது.

(இ) பிரதேச சபையின் கட்டுப்பாட்டிற்குரிய இந்த அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 55(1) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.6 அறவிடுவதற்குள்ள ஊழியர் கடன்

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறிவிட வேண்டிய ஊழியர் கடன் மற்றும் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,551,214 ஆக இருந்தது.

## 2.7 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

சபையின் மூலம் பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் கழிவுப்பொருள் சேகரிக்கப்படுகின்ற பிரதான வீதி 7.2 கிலோ மீற்றராகவும் உப வீதிகள் 8.05 கிலோ மீற்றர் நீளமாகவும் உக்கும் மற்றும் உக்காத கழிவுகளைப் பயன்படுத்தி கழிவுப் பொருள் செயற்திட்டம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக சபையினால் சம்பளச் செலவினமாக ரூபா 1,266,706 தொகையும் வாகனச் செலவினங்களுக்காக ரூபா 1,955,723 தொகையும் செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) அகற்றப்படுகின்ற கழிவுப் பொருட்களை ஈடுபடுத்தி கூட்டுப்பசளைச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பாக மாகாண சபையினால் கழிவப் பொருள் முகாமைத்துவம் தொடர்பாக தொடர்புபடுத்தப்பட்டிராததுடன் மரணச் சடங்கு மண்டபம் மற்றும் வைத்தியசாலைகளின் கழிவுகளை அகற்றுதல் தொடர்பான பொறுப்புக்கள் சபையினால் கையளிக்கப்படாத தனிப்பட்ட உரிமையாளருக்கு கையளிக்கப்பட்டிருந்தது.

(இ) சபை அதிகாரப் பிரதேசத்தில் கழிவுப் பொருளை அகற்றுவதற்காக ஒதுக்கப்பட்ட இரண்டு இடங்கள் குறிப்பாக இனங்காணப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்